Registered as a Newspaper

G.C.E.
A\L 86-ம் ஆண்டு
மீட்டல் வினுவிடை
ஆரம்பம்: 1-2-86
பொருளியல் - குமாரவேல்
கணக்கியல் - மரியதாஸ்
வர்த்தகம் - ஜெயராம்
தமிழ் - குழந்தை
அளவையியல்- கேசவன்
இந்து நாகரீகம் - அருள் நங்கை
Jaffna Education Centre
சாந்தி சினிமா முன்பாக மேல் மாடி
யாழ்ப்பாணம்.


# உதயன்

விலை ரூ-1/=

87-ம் ஆண்டுக்கான
G.A.Q.
2வது பிரிவு
ஆரம்பம்: 1-2-86
JAFFNA Education Centre
சாந்தி சினிமா முன்பாக மேல் மாடி
யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 17 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 19 (30-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-63

# வடக்கில் பிரமாண்ட பேரணி

பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறக் கோரியும் இராணுவ முகாம்களை அகற்றக் கோரியும் நேற்று யாழ் நகரில் நடந்த பிரமாண்டமான பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணத்தில், அரசாங்கத்தின் அடக்குமுறைகளை எதிர்த்து, அண்மைக் காலத்தில் கண்டிராத பிரமாண்டமான பேரணி ஒன்றைப் பொது மக்கள் நடத்தினர்.

குடா நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள், இளைஞர்கள் கூட்டுறவு ஊழியர்கள், ஆசிரியைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

* 1000 மீற்றர் பாதுகாப்பு வலயம் வாபஸ் பெறப்பட வேண்டும்.
* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.
* அப்பாவித் தமிழரின் உயிரைக் குடிக்கும் அரக்கத்தனம் நிறுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து நடத்தப்பட்ட பேரணியில் இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாக மதிப்பிடப்பட்டது.

பேரணி ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிச் செல்ல சுமார் 25 நிமிடங்கள் எடுத்தன. பேரணியில் அகலத்துக்கு ஒரு வரியில் சுமார் இருபது பேர் இருந்தனர். பேரணியின் நீளம் சுமார் 4 மைல்கள் இருக்கும் எனவும் கணக்கிடப்பட்டது.

சுமார் ஐயாயிரம் பெண்களும் பேரணியில் கலந்து கொண்டு உணர்ச்சிவசமாகக் கோஷமிட்டுச் சென்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியுரிமை சட்டம் இன்று சபையில்

கொழும்பு, ஜன. 30

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம்இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதம மந்திரி திரு. பிரேமதாச அல்லது தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்று தெரிகிறது.

இதனிடையில் கொழும்பு மாநகரில் விக்டோரியா, களனிப் பாலங்களுக்கு பலத்த காவல் போடப்பட்டுள்ளன.

வாகனங்களை ஆயுதந் தாங்கிய பொலீஸார் சோதனை இடுகின்றனர்.

முக்கிய சந்திகளில் பொலீஸார் 24 மணி நேரமும் காவல் புரிகின்றனர்.

# கிழக்கில் முழு அளவில் ஹர்த்தால்

மட்டக்களப்பு, ஜன.30

இருதயபுரம் படுகொலையை ஆட்சேபித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நகரமே வெறிச்சோடியது.

பஸ்கள், ரயில்கள் ஓடவில்லை. அரச பாடசாலைகள், அலுவலகங்கள், நீதிமன்றங்கள்,மாநகரசபை, கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கவில்லை. கடைகள் மூடப்பட்டன.

இந்த ஹர்த்தாலை ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) ஒழுங்கு செய்திருந்தது.

நண்பகல் வரை நகரில் ஒரே குண்டு வெடிப்பு சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

### சுவரொட்டி

ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி கோரும் சுவரொட்டிகள் மட்டக்களப்பு எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. ஆயுதப் படையினர் பொது மக்களைக் கொண்டு சுவரொட்டிகளை அகற்றினர்.

### குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு இ.போ.ச. அலுவலகத்துக்கு முன்னால் காலையில் குண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



பேந்தும். பேந்தும் பண்டாரி தான் கொழும்புக்கு வாரூர். அவர் என்ன மாதிரி பூக்கட்டி ஜே. ஆரை வசமாக்கிறூரோ பாப்பம்!

## எம். பி. பதவி இழப்பு

கொழும்பு, ஜன. 30

அக்மீமன எம். பி. திரு நிச்சர்ட் பத்திரான வின் (சுதந்திரக் கட்சி) தெரிவு செல்லுபடியாது என்று உயர் நீதி மன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

# மலையகம்: 40 மணி நேர ஊரடங்கு

கொழும்பு.ஜன.30

மலையகத்தைச் சேர்ந்த நுவரெலியா மாவட்டத்தில் ஒன்பது பிரதேசங்களில்கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏழு மணி தொடக்கம் (இன்று) வியாழக்கிழமை காலை பத்து மணி வரை தொடர்ந்து 40 மணிநேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

எனினும் வட்டகொடை நுவரெலியா ஆகிய இடங்களில் தீவைப்புச் சம்பவங்களும்,தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தில் குறிப்பாகத் தலவாக்கலையில் தொடர்ந்து பதற்ற நிலைமை நிலவுகிறது. அதனுல் தோட்டங்களில் வேலை எதுவும் நடக்கவில்லை. போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது.

நேற்று வட்டகொடையில் பெரும்பான்மை இனத்தவருக்குச் சொந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் இராணுவம் முற்றுகை

யாழ்ப்பாணம்,ஜன.30

நேற்று அதிகாலை 13 கவச வாகனங்களில் மன்னார் வந்த இராணுவத்தினர் பரப்புக்கடந்தானில் உள்ள மாம்பே என்ற கிராமத்தில் முகாமிட்டிருந்தனர். பரப்புக் கடந்தானை அடைய முன்னர் அப்பகுதியை நோக்கி பீரங்கி வண்டிகள் குண்டுமாரி பொழிந்தன.

பின்பு அங்கிருந்து 5 கவச வாகனங்கள் கண்டல் என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டன.

கட்டுக்கரை என்ற இடத்தில் ஹெலிக்கொப்டர் மூலம் இறங்க இராணுவத்தினர் முயன்ற போது போராளிகளின் தாக்குதல் ஆரம்பமானது.

ஹெலிக்கொப்டர் திரும்பி விட்டது.

## ஹெலிக்கொப்டர் தாக்குதல் போராளிகள் பதிலடி!

பிற்பகல் 2 மணி அளவில் மேலும் நான்கு ஹெலிக்கொப்டர்கள் அங்கு வந்து தாக்குதலை நடத்தின.

இச்சம்பவங்களை அடுத்து மன்னாரில் நேற்று கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன. அரச அலுவலகங்கள் நண்பகலுடன் ஸ்தம்பிதம் அடைந்தன. நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

## கொழும்பில் சுவரொட்டி

கொழும்பு, ஜன. 30

கொழும்பு நகரில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டு இருந்த 3 நபர்களைப் பொலீஸார் கைது செய்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியின் தொண்டர்கள் என்று இவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

விசாரணைக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

## கமாண்டோக்கள் காவல் புரிய சுதந்திரக்கட்சிக் கூட்டம்

கொழும்பு, ஜன. 30

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டமூலத்தை எதிர்த்து நேற்று கொழும்பு நகர மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது.

அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த தேரர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கூட்டத்தில் பேசினூர்.

200 க்கு அதிகமான பௌத்த பிக்குகள் உட்பட பெருந்திரளானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டம் நடைபெறும் இடத்தைப் பொலீஸ் கமாண்டோக்கள் காவல் புரிந்தனர்.

இக் கூட்டத்தை தேசபிரேம சங்கமும் மகா சங்கமும் ஒழுங்கு செய்திருந்தன.

# வெகுஜன போராட்டம் மூலமே உரிமைகளை வெல்லலாம்

## நேற்றைய பேரணி முடிவில் தொழிற்சங்கப் பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், ஜன.30

வெகுஜனப் போராட்டம் மூலமே உரிமைகளையும் விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டித் தலைவர் திரு. எஸ். விஜயானந்தன் மேற்கண்டவாறு சொன்னூர்.

நேற்று நடந்த பேரணியின் முடிவில் நடந்த கூட்டத்தில் திரு. விஜயானந்தன் பேசினூர்.

அவர் மேலும்சொன்னதாவது:

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டம் விஸ்தரிக்கப்படும்.

அன்னையர் முன்னணியினர்நடத்தும் போராட்டத்துக்கு அனைவரதும் ஆதரவும் உண்டு.

இப்படி அவர் கூறினூர்.

கூட்டத்துக்கு அன்னையர் முன்னணித் தலைவி திருமதி தேம்மா குணநாயகம் தலைமைவகித்துப்பேசுகையில்சொன்னதாவது:

பாதுகாப்பு வலயங்கள் சனநெருக்கடி மிகுந்த பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேரணியில் கலந்து கொண்ட அமைப்புக்கள்

நல்லூர், ஜன. 30

நேற்றைய பேரணியில் கலந்து கொண்ட தொழிற் சங்கங்கள், பாடசாலைகள், விடுதலை அமைப்புகள் பற்றிய விவரம் வருமாறு:-

1. இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம்.
2. கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்.
3. ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்.
4. ஈழவர் முன்னணி (இம்முன்னணியின் குடாநாடு முழுவதிலும் உள்ள கிளைகளிலிருந்து ஏராளமானோர் பஸ்களில் வந்து பேரணியில் கலந்து கொண்டனர்.)
5. இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் (சி. எம். யூ.)
6. இலங்கை ஆசிரியர் சங்கம். (வட பிரதேசம்)

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

30.1.1986

வியாழக்கிழமை

சுபநேரம்:

8.06 முதல் 9.36 வரை

ராகுகாலம்:

2.06 முதல் 3.36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சண்டேஸ்வரர் குருபூஜைத்தினம்

# முல்லைத்தீவில் 3 ஆவது நாளாகச் சமர்!

கிளிநொச்சி, ஜன. 30

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையில் நேற்று மூன்ருவது நாளாக இடம்பெற்ற மோதலில் பலர் வீடுகளை இழந்து வெளியேறி உள்ளனர்.

சிலர் காயம் அடைந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

பாலம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அதனுல் இராணுவம் முகாமிலிருந்து வெளியே செல்லாது. அங்கிருந்து வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது. இவ்வேட்டுக்களால் கச்சேரி ஊழியர்களான எஸ். சந்தியாகுட்டி (சாரதி) கே. யோகசுந்தரம் (எழுதுவினைஞர்) ஆகியோர் காயம் அடைந்தனர்.

இவர்கள் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ். சர்வானந்தம். புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் எஸ். புலேந்திரம் ஆகியோரால் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம்

(4-ம் பக்கம் பார்க்க)

பிந்திய செய்தி

## பொலீஸ்காரர் ஒருவர் சுட்டுக்கொலை!

### அக்கரப்பத்தனையில்

கொழும்பு, ஜன. 30

தலவாக்கலைக்கு அருகில் உள்ள அக்கரப்பத்தனை என்ற இடத்தில் உள்ள ஒருதோட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரி வருகை ஊர்ஜிதம்

புதுடில்லி, ஜன. 29

இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி எதிர்வரும் 3 ஆம் திகதி இலங்கை வருகிறூர்.

நேற்று இது புதுடில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோகனப் புன்னகையுடன் திரையுலகில் மோகன்

குறுகிய கால கட்டத்தில் வெகு விரைவில் முன்னேறி, திரையுலகில் பிரபலமானவர்களில் நடிகர் மோகன் முதலிடம் வகிக்கின்றார். அவருடைய நடிப்பாற்றல், எளிமை, இனிமை, தன்னம்பிக்கை ஆகியனவே அவரின் வளர்ச்சிக்குக் காரணமாகும்.

'மோகனை எனக்குப் பிரத்தியேகமாகப் பிடித்து விட்டது' என்கிறார் டைரக்டர் விஜயன். 'பயணங்கள் முடிவதில்லை', 'விதி' ஆகிய படங்கள் அவருக்கு வெற்றியளித்தன.

மோகனைப் பற்றி டைரக்டர் விஜயன் கூறுகையில்,

படப்பிடிப்புக்குக் குறித்த நேரத்தில் வருதல், கொடுக்கப்படும் கதாபாத்திரத்தைப் புரிந்து நடித்தல், பணிவு, அடக்கம் என்பன அவரின் விசேஷ குணவியல்புகளாகும்.

வேடிக்கையான பேச்சில் அவருக்கு விருப்பம் அதிகம். 'நான் ஒரு திரையுலக நடிகன்' என்ற இறுமாப்பு அவரிடம் கிடையாது எப்போதும் மோகனப் புன்னகையுடன் காட்சி தருவார்.

'ஓசை' படப்பிடிப்பில் "மிஸ்டர் மோகன், படத்தில் முக்கிய திருப்பம் தரும் காட்சி இது. உங்கள் திறமை முழுவதையும் காட்டுங்கள்" என்றேன். ஒரு புன்னகையோடு "என்னால்இயன்ற வரை நடிக்கிறேன் சார்" என்ற மோகன் உண்மையில் நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நடித்து விட்டார்.

காட்சி தரமாகவே அமைந்து விட்டது. அவரை இழுத்து அணைத்துக் கொண்டு, 'வெல்டன் மோகன்', என்று மனம் விட்டுப் பாராட்டினேன்.

நடிக்க வேண்டிய காட்சி பற்றி கூறினால் நன்றாகப் புரிந்துகொள்கிறார். படித்தவர் என்பதால் கேரக்டர்களை 'ஸ்ரெடி' செய்வதில் அவருக்கு ஆற்றல் இருக்கிறது.

ஏதேனும் நடிக்கும் பொழுது ,எதிர்பார்த்த திருப்தி எனக்கு ஏற்படவில்லை என்றால் ஒரு குழந்தைபோல் குழைந்து கொண்டே "ரீ டேக் எடுத்து விடலாமா?" என்று உரிமையுடன் கேட்பார்.

விதி, நிரபராதி, ஓசை ஆகிய படங்களில் என் டைரக்ஷனில் மோகன் நடித்திருக்கிறார். அவரிடம் ஏதேனும் குற்றம் குறைகள், கோளாறு கண்டு பிடிக்க முடியுமா என்று சுற்றிச் சுற்றி வந்தேன். முடியவில்லை. என்கிறார் டைரக்டர் விஜயன்.

தினசரி சினிமா

## விண்வெளிக்குப் புறப்பட்ட 'சலஞ்சர்'

# அமெரிக்க கலம் வெடித்து சிதறியது

### 2 பெண்கள் உட்பட 7 பேர் பலி

வாஷிங்டன், ஜன.29

அமெரிக்க விண்கலம் 'சலஞ்சர்' விண்வெளியில் வெடித்துச் சிதறி விட்டது.

நேற்று முன்தினம் கேப்கெனவரிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளிப் பயண வரலாற்றில் மிகவும் மோசமான சம்பவம் எனக் கருதப்படும் இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட இதிலிருந்த ஏழு பயணிகளும் கொல்லப்பட்டனர்.

விபத்து நடந்து விண்கலம் வெடித்து தீப்பற்றியதை பல லட்சக் கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் கண்டனர்.

அதன் சிதைவுப் பகுதிகள் விழுந்த இடத்தில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இந்த விபத்தில் யாரும் உயிர்பிழைத்ததாகத் தெரியவில்லை என மீட்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

விண்கலம்வெடித்ததற்கான காரணம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தக் கோர விபத்து சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி அதிகார அமைப்பு இந்த விடயங்களைக் கவனித்து வருவதாகக் கூறப்படுகிறது.

விபத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படும் வரை'ஷட்ல்' விண்கல பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி றேகன் அமெரிக்க விண்வெளித் திட்டம் தொடர்ந்து நடைபெறுமென அறிவித்துள்ளார்.

## பிலிப்பீன்ஸ் தேர்தல்

## வெல்லுபவருக்கு அங்கீகாரம்

### வெள்ளை மாளிகை அறிவிப்பு

வாஷிங்டன், ஜன 29

பிலிப்பீன்ஸ் தேர்தலில் தெரிவு செய்யப்படும் அரசுடன் அமெரிக்கா தனது தொடர்புகளை வைத்துக் கொள்ளும்.

இவ்வாறு வெள்ளை மாளிகை பிரதம அதிகாரி டொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

பேடினன்ட் மாக்கோஸ் ஸுக்கும் கொருசன் அக்கியூனோவுக்கும் இடையில் நடக்கும் தேர்தலில் மோசடிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்க தொலைக்காட்சி பேட்டியொன்றுக்கு பதிலளித்த றேகன்; மோசடி மூலம் அதிகாரத்துக்கு வந்தாலும் அந்த ஆட்சியை அமெரிக்கா அங்கீகரிக்கும் என்று தெரிவித்தார்.

மோசடிகளைக் கையாண்டு ஆட்சிக்கு வரும் அரசை றேகன் நிர்வாகம் அங்கீகரிக்குமா என்று கேட்கப்பட்ட போது மோசடி மூலம் தெரிவுசெய்யப்பட்ட பல அரசுகள் இருக்கின்றனவே என்று கூறி அங்கோலாவை உதாரணம் காட்டினர்.

அங்கோலா சோவியத் ஆதரவு மார்க்சிச ஆட்சி அமைப்பைக் கொண்ட நாடாகும்.

## சீனாவில் வருமான வரி

பீக்கிங்,ஜன 29

சீனாவில் சுயதொழில் வர்த்தகர்கள் புதிய சட்டங்களின்படி கூடுதலான வருமானவரி செலுத்த வேண்டும்.

கூடிய அளவில் இலாப மீட்டுபவர்களுக்கு விதிக்கப்படும் கூடுதல்வரியுடன் 60 வீத வருமான வரியையும் அவர்கள் செலுத்த வேண்டும்.

## வெளி உலகில்

### வெஸ்ட்லன்ட் விவகாரம்:-

# பிரதமர் தட்சருக்கு அரசியல் நெருக்கடி

### பதவி விலகுமாறு தொழிற் கட்சி வற்புறுத்துகிறது

லண்டன், ஜன.29

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இரு அமைச்சர்கள் பதவி விலகிக் கொண்டது பிரதமர் மார்கிரட் தட்சரின் அரசியலில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம் என்று கருதப்படுகிறது.

வெஸ்ட்லன்ட் ஹெலிகொப்டர் நிறுவன விவகாரம் தொடர்பான ஆவணமொன்று பற்றிய இரகசியம்வெளியானதே இந்த இரு அமைச்சர்களின் பதவிவிலகலுக்குக் காரணமாகும்.

பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் ஹேசல்ரீனும் வர்த்தக அமைச்சர் லியோன் பிரிட்டனும் பதவி விலகிய அமைச்சர்களாவர்.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சி வெஸ்ட்லன்ட் நிறுவனவிவகாரம் தொடர்பாக கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு தட்சரைத் திணறடித்ததுடன் பதவி விலகுமாறும் வற்புறுத்தியுள்ளது.

விடயங்களுக்கு மேல் மறைப்புகள் போடுவதாகவும் நாட்டைப் பிழையான பாதையில் இட்டுச் செல்வதாகவும் அரசியல் எதிரிகள் அவரைக் குறை கூறியுள்ளனர்.

அரசியல் பத்திரிகையாளர் மூவருக்கு பிரிட்டிஷ் பிரதமர் தொலைக்காட்சியில்பேட்டியளித்த போது "போவதற்கு எதுநேரம் என்பது எனக்குத் தெரியும். அந்த நேரம் இப்பொழுது வந்துவிட்டதாக நான் நினைக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

சொலிசிட்டர் ஜெனரல் சேர் பற்றிக் மேஹியூவினால் ஹேசல்ரீனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கடித விவரங்கள்பற்றிக்கேட்ட போது அதுபற்றிய விவரங்களை வெளியிட பிரதமர் மறுத்துவிட்டார்.

வெஸ்ட்லன்ட்விடயத்தில் பெரும்பான்மை அமைச்சர்களின் விருப்பத்துக்குமாறாக ஹேசல்ரீன் நடந்து கொண்டதாகக் கருதப்படுகிறது.

## சீக்கிய மிதவாதிகளுக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல்

அமிர்தசரஸ், ஜன. 29

சீக்கிய மதவிவகாரங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் விடயத்தில் சீக்கிய தீவிரவாதிகள் மிதவாதிகளுக்கு பெரியதொரு அச்சுறுத்தலாக வளர்ந்து வருவதாக அஞ்சப்படுகிறது.

இந்தியாவின் ஒரு கோடியே 40 இலட்சம் சீக்கியர்களுக்கான போராட்டம் பஞ்சாப்புக்கு அப்பாலும் கிளைவிடுவதாக நம்பப்படுகிறது.

கடந்த வருடம் ஜூலை மாதம் கையெழுத்தான ராஜீவ் - லோங்கோவால் சமாதான உடன்படிக்கையை தீவிரவாதிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

கடந்த ஞாயிறு அன்று 20,000 பேருக்கு மேற்பட்ட சீக்கிய தீவிரவாதிகள் கைகளில் வாள்களை சுழற்றியபடி ஊர்வலமாகச் சென்று பொற்கோயிலில் பிரமாண்டமான கூட்டமொன்றை நடத்தியுள்ளனர். சீக்கிய மாணவர் சம்மேளனம் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

பொற்கோயில் நிர்வாகப் பணியாளர்களாக தீவிரவாதிகளே நியமிக்கப்பட வேண்டுமென அவர்கள் அங்கு வற்புறுத்தினர்.

1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொற்கோயில் முற்றுகையின் போது சிதைவடைந்த புனித பகுதியை திருத்தும் வேலைகளும் அங்கு துவக்கிவைக்கப்பட்டன.

## நேற்றைய ஊர்வலத்தில் இவர்களும் பங்கு பற்றினர்

பண்டத்தரிப்பு, ஜன .30

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட பத்துக்கிளைகளும், யாழ் மாவட்டக் கிளையும் நேற்றுயாழ்நகரில் நடந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் உறுப்பினர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள், வடபிராந்திய இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. எஸ். சிவராசா தலைமையில் ஊர் வலத்தில் கலந்து கொண்டனர்.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,வடலியடைப்பு வாலிபர் இயக்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக் கோட்டைக் கிளை, சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வட்டுக் கோட்டைத் தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், மற்றும் வட்டுக் கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த பல ஸ்தாபனங்கள் ஆகியவையும் நேற்று யாழ் நகரில் நடந்த மாபெரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

## மக்கள் முகம்



### இணக்க சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், டிச.30

பூநகரி— நல்லூர்— ஆலங்கேணி இணக்க சபை நிர்வாகிகள் விவரம் வருமாறு;

தலைவர்: வே. பாலசுப்பிரமணியம், உபதலைவர்: த. முருகேசம்பிள்ளை, செயலாளர்: க. ரவீந்திரராஜா, உபசெயலாளர்: க. தெய்வேந்திரம், பொருளாளர்: சி. தாமோதரம்பிள்ளை, செயலவை; து. ஆனந்தராசா, செ. சின்னராசா, க. நாகேஸ்வரன், சி.இராசேந்திரம், பொ.சந்திரன், ந. அருந்தவநாயகி, சி. சுந்தராம்பாள்.

## மருதானையில் 5 லட்சம் ரூபா கொள்ளை

கொழும்பு, ஜன. 30

மருதானை டீன்ஸ் வீதியில் உள்ள ஒரு நகைக் கடையில் கடந்த திங்கள் மாலை 5 லட்சம் ரூபா நகைகளும் 12,000 ரூபா பணமும் கொள்ளை இடப்பட்டன.

கடையில் இருந்தவர்களைக் கட்டிப் போட்டு விட்டு, இனந்தெரியாத 3 பேர் இந்தக் கொள்ளையை நடத்தியதாகப் பொலீஸ் விசாரணையில் தெரிய வந்தது.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# மட்டக்களப்புவெள்ளம் நஷ்டம் ரூ. 3 கோடி

மட்டக்களப்பு ஜன,30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பீடு சுமார் 3கோடி ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தகவல் கடந்த வாரம் மட்டக்களப்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்ற அரச திணைக்கள உயர் அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கூட்டத்தில் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட முக்கிய சேதங்கள் தொடர்பான விவரம் வருமாறு:-

சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை -சுமார் 5 ஆயிரம்.

முற்றாக பாதிக்கப்பட்ட நெற்செய்கை – சுமார் 2 ஆயிரம் ஏக்கர்.

சாதாரண பாதிப்பு– சுமார் 20 ஆயிரம் ஏக்கர்.

நீர்ப்பாசன திணைக்கள பாதிப்பு–80லட்சம் ரூபா.

விவசாய திணைக்கள பாதிப்பு–50 லட்சம்ரூபா.

பெருந்தெருக்கள் திணைக்கள பாதிப்பு 1கோடி 10 லட்சம் ரூபா.

## காத்தான்குடியில் இரண்டாவது முறையாக

### ப. நோ. கூ. சங்கத்தில் கொள்ளை

மட்டக்களப்பு, ஜன. 30

காத்தான்குடி கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பணம் 18,000 ரூபா இனந்தெரியாதோரால் கொள்ளை இடப்பட்டது.

திங்கள் காலை 10 மணியளவில் நாவற்குடாவில் வைத்து இச்சம்பவம் இடம் பெற்றது.

காத்தான்குடிக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரும் அவரின் உதவியாளரும் தனியார் கார் ஒன்றில் வங்கிக்குச் சென்று கொண்டு இருந்தனர்.

நாவற்குடாவில் வைத்து கார் வழி மறிக்கப்பட்டது. ஆயுதங்களுடன் வந்த 3 இளைஞர்கள் பொது முகாமையாளர் வைத்து இருந்த 18,000 ரூபா பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடினர்.

அவரது உதவியாளர் வைத்திருந்த 69,000 ரூபா தப்பிவிட்டது.

சில வாரங்களுக்கு முன்னரும் இக்கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

### மாங்கேணியில் சடலம் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு மாங்கேணிப் பகுதியில் துப்பாக்கிக் குண்டு தாக்கி இறந்த ஒரு ஆணின் சடலம், அடையாளங் காணப்படுவதற்காக வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

ஆயுதப்படையினர் இச்சடலத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

## தம்பலகமம் தேடுதலில் 2 தமிழர் துப்பாக்கி சூட்டுக்கு பலி

திருகோணமலை,ஜன.30

தம்பலகமம் கிராமத்தில் ஞாயிறு மாலை தேடுதலின்போது இரண்டு தமிழர்கள் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள்.

அன்னமார்திடல் என்னும் குறிச்சியில் 300க்கு அதிகமாக ஆயுதப்படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்தபோது இந்த இரண்டு பேரும் மரணமானார்கள்.

இறந்தவர்கள் விவரம் வருமாறு;

1. சின்னத்தம்பி யோகராசா, வயது 17.
2. லிங்கராஜா கைலாசபிள்ளை, வயது 25.

[illegible]

திருமலைப் பிரஜைகள் குழுவிடம் இது சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது.

சின்னம்மை நோய் பீடிக்கப்பட்டிருந்த தனது மகனையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்று தாய் ஒருத்தி பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளார்.

இதனிடையில் அன்னமார் திடலில் தீவிரவாதிகள் முகாம் ஒன்றை முற்றுகையிட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இறந்த இரண்டு பேரின் சடலங்களும் படையினரால் எரிக்கப்பட்டு விட்டன.

## திடீர் சோதனை

திருகோணமலை,ஜன.30

திருகோணமலை நகரின் ஒரு பகுதியைச் சுற்றிவளைத்துப் பொலீஸார் சோதனை இட்டனர்.

பிரதான வீதியின் ஒரு பகுதி, மடத்தடிப் பகுதி ஆகியன சோதனையிடப்பட்டன.

15 இளைஞர்கள் வரையில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அடையாளக் கார்ட் இல்லாத காரணத்தால் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

## சட்ட விரோத மின் பாவனையை தடுக்க தாவடியில் குழு

மானிப்பாய் ஜன. 30

தாவடிக் கிராமத்தில் சட்டவிரோத மின்சார பாவனையைக்கட்டுப்படுத்தும் நோக்குடன் பாதுகாப்புக் கண்காணிப்புக் குழு ஒன்று அண்மையில் நிறுவப்பட்டது.

விழிப்புக்குழு, பிரஜைகள் குழு, இளைஞர் அமைப்புக்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள். ஆகியோர் ஒருங்கிணைந்து இதனை ஏற்படுத்தியுள்ளனர்.

சட்டவிரோதமாக மின்சாரம் பாவிப்பவர்களைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் இக்குழு முயற்சிக்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபை உடுவில் உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் இக்குழு அமைக்கப்பட்டது.

## சிறுவன் பலி

கொழும்பு, ஜன.30

வெலிவேரியாப் பகுதியில் குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் சிறுவன் ஒருவன் பலியானான்.

இதுசம்பந்தமாக இலங்கைக் கடற்படை வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வெடித்த குண்டு, கடற்படைக்குச் சொந்தமானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## கல்லில் இறைவனை காண்கிறோம் என்று கூறுவது தவறு?

### நல்லை ஆதீன முதல்வர் அருளுரை

யாழ்ப்பாணம், ஜன. 30

கல்லினுள் இருக்கும் தேரை எப்படி உயிர் வாழுகிறது? அதற்கும் இறைவன்தான் உணவை வழங்குகின்றான். ஆகவே கல்லில் நாம் இறைவனைக் காண்கிறோம் என்று கூறுவது தவறுகுமா?

இப்படி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் சொன்னார்.

இளிநொச்சி உதயபுரம் பகுதியில் கடந்த சனிக்கிழமை (25.1.86) ஸ்வாமிகள் பிள்ளையார் ஆலயத்துக்கும் வைத்திய சாலைக்கும் அத்திவாரக் கற்களை நட்டு வைத்தார்.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஸ்வாமிகள் கலந்து கொண்டு அருளுரை நிகழ்த்தினார்.

அருளுரையில் அவர் கூறியதாவது;

கல்லில் கடவுள் இருப்பாரா— இப்படி சிலர் ஏளனமாகக் கேட்கின்றனர்.

கருங்கல், பஞ்சபூதங்களில் ஆனது. கருங்கல்லினுள் இருக்கும் தேரைக்கு இறைவன் உணவு கொடுக்கிறார்.

அப்படிப்பட்ட கருங்கல்லில்தான் நாம் கடவுளைக் காண்கிறோம்.

இப்படி ஸ்வாமிகள் சொன்னார்.

## லீவு எடுக்காத ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா

மானிப்பாய் ஜன. 30

கடந்த ஆண்டு முழுவதும் எந்தவிதலீவும் எடுக்காமல் கடமைக்கு வந்த நவாலி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் திரு. எஸ். செல்லையா, திருமதி. ஆர். இராஜரத்தினம் ஒருநாள் மட்டும் லீவு எடுத்த மகா வித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி ஆகியோரைக் கௌரவிக்கும் முகமாக பாராட்டு விழா ஒன்று நடைபெறும்

பாடசாலை அபிவிருத்தி சங்கம் இதனை நடத்த தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் திரு எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

மினி சினிமா

புதிய வெளியீடு!

நவா மினி (உஷா மினி முன்பாக)

DOGS OF WAR, MISSING IN ACTION, RAMBO வரிசையில்

RICHARD HARRIS இராணுவத் தளபதியாக

RICHARD ROUNDREE கெரில்லாத் தலைவராக

Game for Vultures

காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பான தாக்குதல்களைக் கொண்டது.

இராணுவ விமானத்தையே தகர்க்கும் வீரசாகசம் (முழுக்க முழுக்க நவீன ஆயுதம்)

* முதலாவதாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நம்மில் நாம் நம்பி இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்; மற்றவரின் உதவியை நாம் எதிர்பார்க்கக் கூடாது.

--அண்ணல் காந்திஜி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24805 22073
30-01-86 த. பெ. 23


## ஓ! வர்த்தகர்களே!!

பாதுகாப்பு வலயத்தை ரத்துச் செய்விக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறச் செய்விக்க வேண்டும்.

இதில் தமிழ் மக்கள் மத்தியில் கருத்து வேற்றுமை இல்லை. அதனால்தான் அந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்துப் பிரமாண்டமான பேரணிகளும், மறியல் போராட்டங்களும் யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

எமது கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக வழங்கவில்லையெனினும் அது தமிழ் மக்களிடம் தோற்றுவிட்டது. ஏற்கனவே அரை குறையாக இயங்கி வந்த சிவில் நிர்வாகம் கடந்த ஒரு வாரம் ''தொப்''பென முற்றாக ஸ்தம்பித்து விட்டது. அரசாங்க அலுவலகங்களில் வேலைகள் எதுவும் நடக்கவில்லை. அது வடபகுதித் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரு வெற்றி என்றே சொல்ல வேண்டும். இதனை அரசாங்கமோ அல்லது அமைச்சர்களோ மறுக்க முடியுமா?

ஆயினும் மக்களின் கோரிக்கைகள் கிடைக்கும்வரை போராட்டங்கள் தொடர வேண்டும். அவை இடை நடுவில் நிறுத்தப்பட்டால், அரசாங்கம் எமது போராட்டங்களை ஒரேயடியாகச் சட்டை செய்யாது விட்டு விடும். ஒரு சின்ன விஷயமாகக் கணித்து விடும். போராட்டத்தைச் சில நாட்களுக்கு நடத்திப் பின்னர் சலித்ததும் நிறுத்தி விடுவார்கள் என நினைத்துவிடும்.

மறியல் போராட்டம் போன்ற தாக்கமுள்ள போராட்டங்களால் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படுவது இயல்பு. அதற்காக நாம் போராட்டத்தை நிறுத்த முடியுமா?

போராட்டங்கள் அவை என்ன வடிவத்திலானவையாக இருந்தாலும், அவற்றால் மக்களுக்குக் கஷ்டம் வருவது இயல்பு. மக்கள் அவற்றைச் சகித்துக் கொள்ளப் பழகுவது அத்தியாவசியம்.

நெருக்கடியான காலங்களில், மக்களின் உணவுத் தேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகக் குறைந்த அளவிலாவது கிடைக்க வேண்டும். குறிப்பாக உணவுப் பொருள்கள் தட்டுப்பாடின்றி நியாய விலையில் கிடைப்பது பிரதானம்.

இவ்விஷயத்தில் பொதுமக்களுக்கு உதவும் கடமை வர்த்தகப் பெருமக்களையே சார்ந்திருக்கிறது. நெருக்கடி மிகுந்த வேளையில் கொள்ளை லாபம் அடித்தல், பதுக்கல் செய்தல் ஆகிய சமூக விரோதச் செயல்களை அவர்கள் நினைத்தும் பார்க்கக் கூடாது.

கொள்முதல் செய்த விலைக்குக் குறைவாகப் பொருள்களை விற்க வேண்டும் என அவர்களை எவரும் வற்புறுத்த முடியாது. அது நியாயமும் இல்லை.

தாமாகவே அவ்வாறு செய்பவர்களை தர்ம சிந்தையுள்ளவர்கள் பட்டியலிலும், இன அபிமானம் உள்ளவர்கள் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளலாம்.

நெருக்கடி நிலையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி கொள்ளை லாபம் அடிப்போரையும், பதுக்கல் செய்வோரையும் இன்றைய காலகட்டத்தில் சமூகம் சகித்துக்கொள்ளாது. இதனை ஒவ்வொரு வர்த்தகரும் புரிந்து கொள்வது பிரதானம்.

தமிழர்களாகிய நாம் இப்போது எதிர்நோக்கும் நெருக்கடிகள் போர் கால இன்னல்களுக்குச் சமமானவை. அவற்றை விட மோசமானவை என்றும் சொல்லலாம்.

நெருக்கடியான நேரங்களில் பொதுமக்களுக்கு உதவும் மனப்பான்மை, வர்த்தகர்களுக்கு மட்டுமன்றி மற்ற எல்லோருக்குமே மலர வேண்டும்.

மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதில் வர்த்தகர்களுக்கு நிறையச் சம்பந்தம் உண்டு. ஆகையால் அவர்களுக்கு இவ்விஷயத்தில் பெரும் பொறுப்பும் பங்கும் உண்டு என நாம் எண்ணுகிறோம்.

போராட்டங்களுக்குக் கைகொடுப்பதாகக் காட்டிக் கொண்டால் மட்டும் போதாது. வர்த்தகர்கள் இதயசுத்தியோடு மக்களுக்கு உதவவும் முன் வருதல் அவசியம்.

## போராட்ட நடவடிக்கைகளை விஸ்தரிக்க கிராமிய

### தொழிலாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30

தமிழ் மக்களைப் பிரதேச ரீதியாக தனிமைப்படுத்தாமல் ஐக்கியப்படுத்தி போராட்ட நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும்.

கிராமியத் தொழிலாளர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களினால் யாழ் குடாநாட்டில் வாழும் மக்களை விட வெளியே வாழ்ந்த தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அப்போது அக்கறை எடுக்காத நாம் இன்று வீட்டுவாசலில் எதிரியைக் கண்டபின்னர் தான் விழித்துக்கொண்டு கூக்குரல் போடுகிறோம். காலம் பிந்தியாவது உண்மை உணரப்பட்டுள்ளது.

எதிர்ப்பு நடவடிக்கை

# யுகப் புரட்சி நிகழ்த்திய அண்ணல் காந்தி

## இன்று அவரது நினைவுதினம்

பயங்கர ஆயுதங்கள்- பலமிக்க படைகள்- இரத்தக் களரி பெருக்கெடுத்த போர்கள்-வன் செயல் முயற்சிகள்- இவை எதனையும் நாடாமல் அஹிம்சை, சத்தியம் எனும் இரண்டு சாந்த ஆயுதங்களை மட்டுமே வைத்துக்கொண்டு ஒரு யுகப் புரட்சியை நடத்திக் காட்டிய மகா வீரர் மகாத்மாகாந்தி.

வெறும் தத்துவங்களை உபதேசிக்கும் போதனையாளராக மட்டுமிராமல் போதித்தவற்றை யதார்த்தமாக வாழ்ந்துகாட்டி தனது கொள்கைகளை நிரூபித்துச் சென்ற உத்தமர் அவர்.

சத்தியத்திற்கும், அஹிம்சைக்கும் இருந்த மிகப் பெரும் வலுவை உலகுக்கு எடுத்துணர்த்த காந்திஜி ஒருவரினால் தான் முடிந்தது. அவரது வாழ்க்கை நெறி தான் இதனை சாதிக்க அவருக்கு உதவியது என்றால் அது மிகையாகாது.

அன்பு, அறம், அஹிம்சை, அடக்கம், நேர்மை, வாய்மை, சத்தியம், புறங்கூறாமை, கள்ளாமை, இன்னா செய்யாமை, இறை நம்பிக்கை, தளரா முயற்சி—இவை அவரது

> இன்று அண்ணல் காந்தியின் நினைவு தினம். அதனையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

வாழ்க்கை நெறியைக் கட்டி வளர்த்த கட்டுக் கோப்புகள்.

இந்த நெறிகளை விடாது கடைப்பிடித்து, அந்த அத்திவாரத்தில் தான் அவர் சுதந்திர இந்தியாவைக் கட்டி எழுப்பினார்.

காந்திஜியின் வாக்கிலே உண்மை மிளிர்ந்தது, நெஞ்சிலே சத்தியம் தோற்றியது, செயலிலே அஹிம்சை சுடர் விட்டது; கொள்கையில் உறுதி தொனித்தது; போக்கிலே நேர்மை புலப்பட்டது. அதனால் இந்திய மக்கள் அவருக்குப் பின்னால் போனார்கள்- தமது தாயகத்தின் சுதந்திரத்தை மீட்டெடுத்தார்கள்.

தென் ஆபிரிக்காவில் அவர் போராட்டம் நடத்திய காலத்திலும் சரி, இந்தியாவிலே சத்திய வீறு கொண்ட அஹிம்சை சிங்கமாய் எழுந்துநின்ற காலத்திலும் சரி அவரது குரல் 'உரிமை, உரிமை' என்றே ஒலித்தது; 'சுதந்திரம், சுதந்திரம்' என்றே குரல் கொடுத்தது.

இன ஒடுக்கல், தீண்டாமை, அடிமைத்தனம் இவற்றை மனித வாழ்க்கையிலிருந்து தூக்கி எறிய அவர் தன்னை வருத்திப் போராடினார்.

இந்த மூன்றும் நாகரீகம் மிக்க மனித குலத்தை பீடித்திருக்கும் மிருக குணங்கள் என்று அவர் கருதினார்.

அவரது அஹிம்சைப் போராட்டமும் அதன் சக்தியும் உலகையே வியக்கச் செய்தன. அணுசக்திக்கு இருந்த வலுவை விட மக்கள் ஒன்றிணைந்து நடத்தும் சாத்வீகப் போர் வலுவானது என்பதை அவர் நிரூபித்தார்.


உலகப் போரிலே பல முனைகளில் தனது படைகளின் ஆயுத வலிமையை வெளிப்படுத்திய பிரிட்டிஷ் அரசு மகாத்மா காந்தியின் சாத்வீகப் போராட்டத்திற்கு முன்பு மண்டியிட்டுத் தலை குனிந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியிலே அடிமை இருளினுள் மூழ்கிக் கிடந்த இந்திய மக்களுக்கு சுதந்திர ஒளியை மீட்டுக் கொடுக்க அவர் தன்னையே வருத்தினார்; பட்டினி கிடந்தார்; உண்ணா நோன்பு நோற்றார்.

அவர் முயற்சி பலன் தந்தது. மக்கள் மத்தியில் மகாத்மா ஆனார் காந்திஜி.

தங்களுக்குத் தேவையானவற்றை தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதை காந்திஜி வலியுறுத்தினார். சுயராஜ்யம் மட்டுமல்ல சுய உற்பத்தியும் பொருள்களில் தன்னிறைவும் கட்டாயமானது என்பதை எடுத்துரைத்தார்.

ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ்க்கை வாழ்வதே நெறி என்று கூறிய காந்திஜி, எளிமையான வாழ்க்கையினால் ஓரளவேனும் பிறர்க்கு உதவ வாய்ப்பு ஏற்படும் என நம்பினார்.



இந்துமத கோட்பாடுகளை காந்திஜி முழுமையாக ஏற்றார். அவற்றைச் சரியான முறையில் கடைப்பிடித்துக் காட்டினார்.

இந்துமதம் காட்டிய சமய சமரச நெறியின் கீழ் சகல மக்களையும் ஒன்றிணைத்து ஒற்றுமையான பாரத சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப அரும் பாடுபட்டார்.

மதங்கள் மக்களை பிணைப்பவை; பிரிப்பவை அல்ல என்பதை எடுத்துரைத்தார், மக்கள் மத்தியில் பரப்பினார்.

மக்களுக்காக தாம் நடத்திய தியாகங்களினாலும், போராட்டங்களினாலும் மக்கள் தலைவராக விளங்கிய காந்திஜி எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி ஆசையை வெறுத்தார். தன்னை நாடி தேடி வந்த பதவிகளை துச்சமென மதித்து தூக்கி எறிந்தார்.

பதவியைவிட 'மக்கள் சேவை' ஒன்றே தமது வாழ்க்கை நோக்கம் என்பதை உணர்ந்து செயற்பட்டார்.

அஹிம்சை, சத்தியத்தை வாழ்க்கையில் தவற விடாது கடைபிடிக்க அவர் நடத்திய போராட்டங்கள் பல. அவற்றை 'சத்திய சோதனை'யாக வடித்துத் தந்தார். அது தறிகெட்டு குழம்பி ஆயுத உற்பத்தியில் தன்னையே நாசமாக்கிக் கொண்டிருக்கும் இந்த உலகுக்கு நல்வழி காட்டும் ஒரு நன்னூலாக அமைந்திருக்கிறது.

- வித்தியா நடேசபிள்ளை -



### பொய்யாமொழி

குறள்:
தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

பொருள்:
தம் மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர்; மக்களாகிய அவர்தம் பொருள்கள் அவரவருடைய வினையின் பயனால் வந்து சேரும்.

## பெப்ரவரி 28 வரை லைசென்ஸ்

கொழும்பு, ஜன. 30

வாகனச் சொந்தக்காரர்கள் 1986-ம் ஆண்டுக்கான லைசென்ஸைப் பெறும் கடைசித் திகதி பெப்ருவரி 28 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1985-ம் ஆண்டுக்குரிய லைசென்ஸைச் சமர்ப்பிக்காமல் 1986-ம் ஆண்டுக்கான லைசென்ஸை பெப்ருவரி 28 வரை வாகன உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

பெப்ருவரி 28-க்குப் பின்னர் லைசென்ஸ் பெறுபவர்கள், 1985-ம் ஆண்டுக்கான லைசென்ஸைச் சமர்ப்பிப்பதுடன் மேலதிகக் கட்டணமும் செலுத்த வேண்டும்.

## கணவரைத் தேடிச் சென்றபோது இரத்தம் தோய்ந்த நிலையில்

### இறந்து கிடந்தார் - அருகில் சைக்கிள் கிடந்தது

#### இறந்தவரின் மனைவி சாட்சியம்

பருத்தித்துறை, ஜன. 30

தொழில் சம்பந்தமாக வெளியே சென்ற எனது கணவர் வீட்டுக்கு வராததால், அவரைத் தேடிச் சென்ற போது விநாயகர் முதலியார் வீதி, நீதிமன்ற வீதிச் சந்தியில் கணவர் பலத்த காயங்களுடன் இரத்தம் பாய்ந்த நிலையில் இறந்து கிடந்தார். அருகில் அவரது சைக்கிளும் கிடந்தது.

பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த கே. தங்கராசாவின் மரண விசாரணை அண்மையில் நடைபெற்றது.

அப்போது சாட்சியமளித்த, மரணமானவரின் மனைவி தமிழரசி தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை நீதிவான் திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் போது மரணமானவரின் மனைவி தமிழரசி தங்கராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது,

மரணமானவர் எனது கணவர். எமக்கு 9 பிள்ளைகளுண்டு. இவர் பேக்கரி வைத்திருக்கிறார். பாணை உற்பத்தி செய்து கொண்டு சென்று விநியோகித்து வந்தார்.

இவர் தொழில் சம்பந்தமாகக் காலையில் வீட்டைவிட்டு வெளிக்கிட்டால் இரவுதான் வீட்டுக்குத் திரும்புவார்.

நேற்றும் (சம்பவதினம்) வழமைபோலத் தொழில் சம்பந்தமாகக் காலையில் வீட்டைவிட்டுச் சென்றார். இரவு வீட்டுக்கு வரவேண்டிய அவர் வர வேண்டிய நேரமாகியும் வரவில்லை. இதனால் அவரைத் தேடினேம். இரவு முழுவதும் அவர் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அடுத்த நாள் காலை இராணுவ முகாமுக்கு அண்மையில் விநாயகர் முதலியார் வீதியில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்துகிடக்கிறார் என்று சனங்கள் சொன்னார்கள்.

நானும் மகளும், எனது கணவரின் தந்தையும் அவ்விடத்திற்குச் சென்று பார்த்தோம். அவ்விடத்தில் எனது கணவர்தான் சூட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

உடனடியாக நாம் மூவரும் அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று அவ்விடத்தில் இறந்து கிடப்பவர் எனது கணவர் என்று தெரிவித்தோம்.

முதல்நாள் காலை 10 மணி அளவில் ''பாண் தங்கராசா'' முகாமிற்கு வந்து போனார் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் அனுமதி பெற்று இறந்து கிடந்த கணவரின் சடலத்தை எடுத்து வீட்டுக்குக் கொண்டு வந்தோம். இப்படி அவர் கூறினார்.

இறந்தவரின் மகள், தந்தை ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

## குடியுரிமைச் சட்டம்

### பற்றிய தீர்ப்பு : நீதிமன்றம் இன்று அனுப்பி வைக்கும்

கொழும்பு, ஜன. 30

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்ட மூலம்பற்றிய தீர்ப்பை உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றச் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கும்.

ஒருநாள் விசாரணையின்பின்னர் பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா இதை அறிவித்தார்.

இச்சட்டமூலம் 3 பேர் கொண்ட நீதியரசர்கள் முன்னால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமூலம், அரசமைப்புச் சட்டத்துக்கு இணங்கியதாக உள்ளதா? என்பதைப் பரிசீலனை செய்ய உயர்நீதிமன்றத்துக்கு அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

27-ஆம் திகதி நடந்த விசாரணையில் சட்டமூலம், அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று மக்கள் ஐக்கிய முன்னணி, சுதந்திரக் கட்சி ஆகியன வாதிட்டன.

ஒரு பௌத்தபிக்குவும் சட்டமூலத்தை எதிர்த்து வாதாடினார்.

முடிவு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் விசாரணையின் பின்னர் அறிவித்தது.

## யாழ் பொதுநல சேவை சங்கம்

### ஆணையாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜன 30

யாழ் நகர மக்களின் அபிப்பிராயங்களைக் கோரியதன் பின்னரே மாநகர சபைக்கான புதிய நிர்மாண வேலைகளைத் தொடங்க வேண்டும்.

மக்கள் தமது கருத்துக்களைச் சொல்லத்தக்க சுமுகமான நிலைமைகள் ஏற்படும் வரை இதனைப் பின்போட வேண்டும்.

யாழ் பொதுநல சேவை சங்கம் யாழ் மாநகர ஆணையாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்து உள்ளது;

மின்சாரத்தடை, வீதிகள் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. சுகாதார சேவைகள் சீரழிந்துள்ளன.

இவை குறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி பொதுநல சேவைச் சங்கத் தலைவர் திரு. தா. ந. மாணிக்கவாசகர் கையொப்பம் [illegible] கோரிக்கைகளை ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிப்பதே உண்மையான போராட்டமாகும்.

இப்படி அறிக்கையில் [illegible] கோரில் கூறப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் - போராளிகளை பிரித்து அழிக்கும் திட்டம்

### பாதுகாப்பு வலயம் பற்றி கம்யூனிஸ்ட் கட்சி

யாழ்ப்பாணம், ஜன. 30

பொதுமக்களையும் போராளிகளையும் பிரித்து அழிக்கும் தந்திரோபாயமே பாதுகாப்பு வலயச் சட்டம்.

இப்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கிளை கண்டித்துள்ளது.

26 1.1986 ஞாயிற்றுக்கிழமை கட்சிக் காரியாலயத்தில் நடந்த பொதுச் சபைக் கூட்டத்தில் இது சம்பந்தமாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து சகல ஆயுதப்படையினரும் வாபஸ் பெறப்படவேண்டும். பாதுகாப்பு வலயத்தையும் அரசு நீக்கவேண்டும்—இப்படி தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் [illegible] பொன். குமார[illegible] தலைமை வகித்தார்.

## சமய நிதிகளில்

### கும்பாபிஷேகம்

நல்லூர்' ஜன, 30

காரைநகர் கருங்காலி போசுட்டி ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் ராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

* *

யாழ்ப்பாணம் ஜன. 30

கோப்பாய், பலாலை கண்ணகை அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் 31. 1. 1986 வெள்ளிக்கிழமை காலை 9. 12 க்கும் 9. 36 வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெற உள்ளது.

### சங்காபிஷேகம்

தமிழ் மக்கள் இன்னல்கள் நீங்கி சுபிட்சமாக வாழ வேண்டி உசன் கந்தசாமி கோயில் நாளை 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேஷ சங்காபிஷேக வைபவம் நடைபெறும்.

அன்று உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவ, மாணவியரின் பஜனை நிகழ்ச்சியும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற உள்ளன.

சங்காபிஷேக பிரதம குரு பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள் சங்காபிஷேக வைபவத்தை நடத்துவார்.

## மறியல் போராட்டம் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 3[illegible]

யாழ் செயலகத்துக்கு முன்னால் நடைபெற்று வந்த மறியல் போராட்டம் சில தினங்களுக்கு இடை நிறுத்தி வைக்கப்படுகிறது.

மக்களின் அன்றாட அலுவல்களுக்கு அசௌகரியம் ஏற்படாமலும் உணவு விநியோகம் தடைப்படாமலும் இருப்பதற்காகவே இடை நிறுத்தி வைக்கப்படுவதாக அன்னையர் முன்னணி தனது அறிக்கையில் காரணம் காட்டி இருக்கிறது.

மறியல் போராட்டத்துக்கு இதுவரை ஆதரவு தந்த பல்வேறு நிறுவனங்களுக்கு அன்னையர் முன்னணி நன்றியும் தெரிவித்துள்ளது.

## நல்லை முதல்வர் சமய தீட்சை வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜன. [illegible]

கிளிநொச்சி மாவட்டத்தில் உதயபுரம் பகுதியில் சுமார் 200 மலையகத் தமிழ்க் குழந்தைகளுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள் சமய தீட்சை வழங்கினார்.

கடந்த சனிக்கிழமை இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

உதயபுரம் பகுதியில் 300க்கு அதிகமான மலையகத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன.

அங்கு சென்ற ஸ்வாமிகளை மக்கள் பக்தி சிரத்தையுடன் வரவேற்று ஒன்றரை மைல் தூரம் ஆலவட்டம், மரியாதைகளுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதிவான் மேல் விசாரணையை ஒத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88 Aug. A|L வகுப்புகள்
11.30–Chemistry: திரு. தில்லைநாதன்
12.30–Physics: திரு. வர்ணம்
1.30–Botany: திரு. குகாதரன்
2.30–Zoology திரு. நாகநாதன்
1.30–3.30–Maths: திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, JAFFNA.

# உதயன்

30-01-1986

88 AUG.
A|L வகுப்புக்கள்
ஆரம்பம்: 01 – 02 – 86
விபரங்கட்கு;
New Master Institute
BMC Lane JAFFNA.

இந்தியா கை கழுவும் வரை

# இனப்பிரச்சினையில் அமெரிக்கா அக்கறை காட்டக் கூடாது

## சஞ்சிகை கருத்து

நியூயோர்க், ஜன.29
இந்தியா கை கழுவும் வரை இலங்கை இனப் பிரச்சினையில் அமெரிக்கா தீவிர அக்கறை காட்டக் கூடாது.

அப்படி அக்கறை காட்டினால் அது சீரடைந்து வரும் இந்திய – அமெரிக்க உறவில் நாசகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இப்படி 'கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்' என்ற ஆங்கில சஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

'மீண்டும் இலங்கைப் பேச்சுக்கள்' – என்ற தலைப்பில் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் இச் சஞ்சிகை ஆசிரியர் தலையங்கத்தின் சில பகுதிகளில் எழுதியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு றேகன் நிர்வாகம் பலமான ஆதரவு வழங்க வேண்டும்.

இப்பிரச்சினையில் வெளியே தெரியக் கூடிய முயற்சிகளை அமெரிக்கா எடுத்தால், அது சீரடைந்து வரும் அமெரிக்க – இந்திய உறவில் நாசகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அமெரிக்க – இந்திய உறவு, கடந்த சில ஆண்டுகளிலும் பார்க்க நல்ல நிலைமையில் உள்ளது.

இந்தியா கை கழுவும் வரை இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்கா தீவிர அக்கறை காட்டக் கூடாது.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா இன்னும் அக்கறை காட்டி வருகிறது. ஒரு அரசியல் தீர்வைக் காண்பதில் இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

1985 நடுப்பகுதியில் பெரும்பான்மைச் சிங்கள அரசாங்கத்தின் மீதும் சிறுபான்மைத் தமிழர் மீதும் செலுத்திய நிர்ப்பந்தம் போன்று, மீண்டும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நிர்ப்பந்தம் செலுத்தினுல் தான் ராஜதந்திரத் தீர்வு ஒன்றைக் காண முடியும். இப்படி ராஜதந்திர நிபுணர்கள் கூறுகின்றனர்.

திரு. காந்தி முயற்சி செய்ய வேண்டும்.

இனப்பிரச்சினையை நீடிக்க விட்டால் தமிழர் மிதவாதத் தன்மையில் இருந்து விடுபட்டு தீவிரவாதத் தன்மையையே நாடுவர்.

எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதையே கஷ்டமாக்கி விடும். இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## நேற்றைய பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள்

நல்லூர், ஜன. 30
நேற்றைய பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்திச் சென்ற சுலோக அட்டைகளில் இருந்த வாசகங்கள் வருமாறு:–

'கோட்டைக்குள் பாதுகாப்பு, வெளியில் வந்தால் ஓட்டம்.

பாதுகாப்பு வலயத்தை நீக்கித் தமிழ் மக்களை வாழ விடு.

பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறு. ஈழவரை வாழ விடு.

பீரங்கி, விமானத் தாக்குதல்களை உடன் நிறுத்து.

ஈழமண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து.

கொல்லாதே! கொல்லாதே!! ஈழவரை வாழ விடு.

இராணுவத்தீர்வு வேண்டாம். அரசியல் தீர்வு காண்.

எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரி.

அடக்கு முறைகளை ரத்துச் செய்.

பெண்கள் மீது பலாத்காரம் செய்யாதே.

கோட்டையிலே பந்தாட்டம். தமிழன் உயிர் ஊசலாட்டம்.

கூட்டுறவுக் கட்டடங்களைக் குண்டுகளால் சிதைக்காதே.

கூட்டுறவுக் கொள்கை யாழ் குடா நாட்டில் உயர்ந்து நிற்கும் வீரசிங்கம் மண்டபத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தா.

அப்பாவி மக்கள் உயிர் குடிக்கும் அரக்கத்தனத்தை நிறுத்து.

மாணவர்களின் கல்விக் கூடங்களை மரண கூடங்களாக மாற்றுதே.

ஆயிரம் மீற்றர் சட்டம் தமிழனை அழிக்கப்போகும் திட்டம்.

இவற்றையே பேரணியினர் சுலோகங்களாகக் கோஷித்துக் கொண்டு சென்றனர்.

## மட்டக்களப்பில் ஹெலிக்கொப்டரிலிருந்து துண்டுப் பிரசுரங்கள்

மட்டக்களப்பு, ஜன 30
ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் மட்டக்களப்பு மாவட்டம் எங்கும் வீசப்பட்டன.

இணைப்பதிகாரியின் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களே இவை.

தீவிரவாதிகளுக்கு உதவ வேண்டாம் என்று இத்துண்டுப் பிரசுரங்களில் இணைப்பதிகாரி வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

### நீத்தார் பட்டியல்

## கணபதிப்பிள்ளை இராசதுரை

பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கணபதிப்பிள்ளை இராசதுரை அவர்கள் 27.1.86இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30.1.86இல் 3 மணியளவில் 31, மானிப்பாய் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அவர் சிவயோகத்தின் அன்புக் கணவரும், இரஞ்சிதமலர் U.K., யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரன், செந்தமிழ்ச் செல்வி, சாந்தநாயகி, வதனி என்போரின் அன்புத் தந்தையும், நாகராஜா U.K., சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனுரும், ஜனனி, ஆரணியின் பேரனுரும், சிவலிங்கம் (சிவலிங்கம் மோட்டோஸ் உரிமையாளர்), குணரத்தினம் (பிள்ளையார் மெற்றல் வேக்ஸ் உரிமையாளர்), அபிமன்யு (சிவா ஸ்ரோஸ் உரிமையாளர்), சகாதேவன் (பிள்ளையார் ரேடிங் கொம்பனி உரிமையாளர்), தையல்நாயகி, சகுந்தலை ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தினதும், பரஞ்சோதிநாதன் (ஜோதி விலாஸ் உரிமையாளர், மன்னுர்), பாலகிருஷ்ணன் (பாலகிருஷ்ணு ஸ்ரோஸ் உரிமையாளர்), பாலச்சந்திரன் (கல்வி இலாகா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

இங்ஙனம்,

மனைவி, மக்கள், மருமக்கள்.

## பேரணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7. பொதுச் சேவை தொழிற் சங்க சம்மேளனம்.
8. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
9. அரசாங்க லிகிதர் சங்கம்.
10. ஸ்ரீலங்கா தேசிய போக்கு வரத்து ஊழியர் சங்கம்.
11. ஸ்ரீலங்கா தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம்.
12. சீமெந்துப் பொதுத் தொழிலாளர் சங்கம்.
13. சமூக அபிவிருத்தி முன்னணி.
14. பல்கலைக் கழக மாணவர்கள். (சகல பீடங்களும்)
15. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.
16. கிராமிய உழைப்பாளர் சங்கம்.
17. வாஷிங்டன் மாணவர் அமைப்பு
18. கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி மாணவர்கள்.
19. அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்கள்.
20. தமிழ் மகளிர் அவை முகாம் தொண்டர்கள்.
21. யாழ் மாநகரசபை ஊழியர்கள்.
22. யாழ் மின்சார சபை ஊழியர்கள்.

## வெகுஜன---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மனித உயிர்களைச் சிறிதளவுகூட மதிக்காத செயல்.

அரசின் இச்சட்டங்கள் பாசிஸப் போக்கானவை. இலகுவாகத்தீர்த்துவைக்கக்கூடிய இனப் பிரச்சினையை அரசு சிக்கலாக்கிவிட்டது.

அன்னையர் முன்னணியின் முறைப்பாட்டுக்கு அமைச்சரிடமிருந்து உத்தியோகபூர்வமான பதில் கிடைக்கவில்லை.

இடைநடுவில் நிறுத்தி வைக்கப்படும் மறியல் போராட்டம் சில தினங்களில் வேறு வடிவத்தில் தொடரப்படும்.

இப்படி அன்னையர்முன்னணித்தலைவிசொன்னுர்.

மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்கள்பொன் குமாரசாமி, அரசாங்க லிகிதர் சங்கம் சார்பாக திரு. ஆர். தவராசா, இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், இலங்கைத் தொழிற்சங்கம் சார்பில் ஜனுப் எம். ஏ. சி. இக்பால், இலங்கை ஆசிரியர்கள் சங்கம் சார்பில் திரு. க. சிவராசா, ஈழவர் முன்னணி சார்பில் திரு. ராஜ்குமார், ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனம் சார்பில் திரு. ஏ. கே. அண்ணுமலை, கூட்டுறவு ஊழியர்சங்கம் சார்பில் திரு. க. இராசதுரை, கிராமிய உழைப்பாளர் சங்கம் சார்பில் திரு. என். மகாலிங்கம் சிமெந்து பொதுத்தொழிலாளர் சங்கம் சார்பாக திரு. சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் அங்கு உரை நிகழ்த்தினுர்கள்.

இறுதியில் முகமூடி நாடகங்களும் தெருக்கூத்துக்களும் அங்கு இடம்பெற்றன.

[illegible] ரத்தினம் நன்றி தெரிவித்தார்.

# டாக்டர்கள் நேற்று திடீர் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 30
கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பணியாற்றும் இருதய நிபுணர் டாக்டர் டி. பி. அத்துக்கோறளை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து, டாக்டர்கள் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு பெரியாஸ்பத்திரி, லேடி றிஜ்வே ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி, டி சொய்சா ஆஸ்பத்திரி, காஸல் வீதி ஆஸ்பத்திரி, கண்டி, பேராதனை, ருகம, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆஸ்பத்திரிகளில் வேலை நிறுத்தம் இடம் பெற்றது.

இன்றில் இருந்து இந்த ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் சட்டப்படி வேலை செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

## யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைகளே நேற்று நடைபெற்றன

நல்லூர், ஜன. 30
யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று அவசர சிகிச்சைகளைத் தவிர வேறு சிகிச்சைகள் எதுவும் நடைபெறவில்லை.

டாக்டர்கள் வரவும் குறைந்து காணப்பட்டது.

கொழும்பு வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் அத்துக்கோரள தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்க வைத்தியர் சங்கத் தலைமைப் பீடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் டாக்டர், கள், ஊழியர்கள் வேலை செய்ய மறுத்தனர்.

ஆயினும் நோயாளிகளுக்கு வழமைபோல் சிகிச்சை அளிக்கப்பட்டது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நோயாளர் மிகவும் குறைந்தே காணப்பட்டனர்.

## கிழக்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று வெடித்தது.இதை தொடர்ந்து பஸ்கள் ஓடவில்லை.

ரயில்நிலையத்துக்கு அருகிலும் குண்டு ஒன்று வெடித்தது. இதைத் தொடர்ந்து காலை 6.45க்கு புறப்படஇருந்த காகிதத் தொழிற்சாலை ரயில் ரத்துச் செய்யப்பட்டது. பின்னர் மட்டக்களப்பு நகரில் இருந்து 10 மைல் தொலைவில் ரயில் பாதையில்உள்ள சிலீப்பர் கட்டைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டது.

இதனுல் மட்டக்களப்பு ரயில் சேவைகள் முற்றுகரத்துச் செய்யப்பட்டன.

கொழும்பில் இருந்து வந்த உதயதேவி ரயில் பொலன்னறுவையுடன் நிறுத்தப்பட்டது.

### திறப்புக்கள் அபேஸ்

மட்டக்களப்புச் செயலகம், மாநகரசபை, தேசிய சேமிப்பு வங்கி, விவசாய அலுவலகம்ஆகியவற்றின் திறப்புக்களை இனந்தெரியாத நபர்கள் பறித்துச் சென்றனர்.

ஹர்த்தால் முடிந்த பின்னர் திறப்புக்கள் திருப்பித் தரப்படும் என்று அவர்கள் கூறிச் சென்றனர்.

இதனுல் அரச ஊழியர்கள் வெளியே நிற்க வேண்டியதாயிற்று. வெளியே நின்றபடி கடதாசி ஒன்றில் கையொப்பமிட்டுவிட்டு ஊழியர் வீடு திரும்பினர்.

திறந்திருந்த சில அலுவலகங்களிலும் ஊழியர் சில மணித்தியாலங்கள் நின்று விட்டு வீடு திரும்பினர்.பாடசாலைக்கு மாணவர்கள் செல்லவேஇல்லை. ஆசிரியர்கள் காலை 10 மணியுடன் வீடு திரும்பி விட்டனர்.

### கடை அடைப்பு

சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. கடைகளை திறக்க ஆயுதப்படையினர் எடுத்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

இதனுல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிலகடைகள்சேதமாக்கப்பட்டன.

உடைக்கப்பட்ட கடைகளில் இருந்து சோடா, சிகரெட்டுக்கள் கொண்டு போகப்பட்டன.

சில கடைக்காரர்களிடம் ஆயுதப்படையினர் பின்வருமாறு கூறினுர்களாம்:–

"உங்களுடையஆட்கள் இறந்ததற்குஇன்றுஹர்த்தால்.எங்களுடைய ஆட்கள்இறந்ததற்குநாளைக்கு ஹர்த்தால்நடத்த வேண்டும்" — இப்படிப் படையினர் கூறிச் சென்றுர்களாம்.

ஆயுதப்படையினர் கால் நடையாக நகரில்ரோந்து சென்றனர்.

## ★ லெனின் மீண்டும் கைது!

கொழும்பு, ஜன. 30
நீர்கொழும்பில் இருந்து தப்பிச் சென்ற லெலின் என்றழைக்கப்படும் ஹென்றி என்பவரைப் பொலீஸார் களனியில் வைத்து மீண்டும் கைது செய்தனர்.

தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும் இவருக்கும் தொடர்பு உள்ளது என்ற சந்தேகத்தின் பேரில்தான் முன்னர் இவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்தார்.

## முஸ்லிம்கள் பிரார்த்தனை

கொழும்பு, ஜன 30
உலக முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமை வேண்டி நாளை வெள்ளிக்கிழமை இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் விசேஷ பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள்.

## பண்டாரி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
லியில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

கூட்டணியின் யோசனைகள் தொடர்பாக தற்போது இருந்து வரும் முட்டுக்கட்டை நிலையை நீக்கும் முயற்சியில் பண்டாரி ஈடுபடுவார். 5 ஆம் திகதி வரை அவர் கொழும்பில் தங்கி இருப்பார்.

## முல்லைத்தீவில். . .

(1–ம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர்.

செபஸ்தியாம் பிள்ளை வயது 23) யோகபாலன் (வயது 11) ஆகியோரும் காயம் அடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு கராச்சிக் குடியிருப்பு மக்கள் பலர் அகதிகளாக புதுக்குடியிருப்பு பகுதிக்கு வந்துள்ளனர். பஸ் சேவைகள் அனைத்தும் வட்டுவால் என்னும் இடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பெரும் பதற்ற நிலை இருந்து வருகிறது. தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன.

## பொலீஸ்காரர். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இறந்த பொலீஸ்காரரின்பெயர் பிரியதர்சன.

இவருடன் கடமையில் ஈடுபட்டிருந்த மற்றைய இரு பொலீஸ்காரர்களைக்காணவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இச்செய்தி அச்சுக்கும் போகும்வரை தகவல் எதுவுமில்லை.

## "டைம்ஸ்" ரஞ்சித்துக்கு

கொழும்பு, ஜன. 30
"டைம்ஸ் ஒப் சிலோன்" ஸ்தாபனத்தின் செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வெளியிடும் உரிமை திரு. ரஞ்சித் விஜயவர்த்தனுவுக்குச் சொந்தமான "விஜயா பப்ளிக்கேஷன்ஸ்" நிறுவனத்துக்கு விற்கப்படும்.

லேக்ஹவுஸின் முன்னுள் உரிமையாளரான திரு. ரஞ்சித் செய்து கொண்ட விண்ணப்பத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

## என்ன வந்தாலும் குடியுரிமை சட்டமூலம் நிறைவேறும் என்கிறுர் அல்விஸ்

கொழும்பு, ஜன. 30
என்ன பிரச்சினை வந்தாலும் மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டமூலம் நிறைவேற்றப் பட்டே தீரும்.

தலவாக்கலைச் சம்பவத்துக்கும் குடியுரிமைச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கும் சம்பந்தமே இல்லை.

இப்படி இராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ சில்வா செய்தியாளரிடம் சொன்னுர்.

மலையகத்தில் இடம் பெற்றது. கோஷ்டிச் சண்டைதான் என்று கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ சில்வா சொன்னுர்.

## அரபாத் வருகிறுர்

கொழும்பு, ஜன. 30
பலஸ்தீன இயக்கத் தலைவர் திரு. யசீர் அரபாத் இலங்கைக்கு விரைவில் விஜயம் செய்வார்

இத்தகவலை இலங்கை பலஸ்தீனப் பிரதிநிதி வெளியிட்டார்.

## வடக்கில் பிரமாண்ட - - -

(1–ம் பக்கத் தொடர்ச்சி)
அடக்கு முறைகளுக்கு எதிரான மக்களின் உணர்வைப் பேரணி பிரதிபலித்தது.

### பெருமாள் கோயிலில் இருந்து

வரதராஜப் பெருமாள் ஆலய முன்றலில் காலை 9–30 மணியளவில் பேரணி ஆரம்பமானது.

வடபிரதேசக் கூட்டுக் கமிட்டியின் தலைவர் திரு. எஸ். விஜயானந்தன் தலைமை வகித்துப் பேரணியை நடத்திச் சென்றுர்.

கூட்டுறவுசங்கஊழியர், தொழிலாளர்கள் இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து ஊர்வலமாக வந்து பேரணியுடன் கலந்து கொண்டனர்.

கலட்டிச் சந்தியில் இருந்து சமூக அபிவிருத்தி முன்னணியினர் ஊர்வலமாகவந்து நாவலர் வீதி– பிரவுண் வீதிச் சந்தியில் பேரணியுடன் கலந்து கொண்டனர்.

பேரணி சென்ற வீதிகள் வருமாறு:

நாவலர் வீதி, கே. கே. எஸ். வீதி, கன்னுதிட்டிச் சந்தி ஊடாக கஸ்தூரியார் வீதி, பஸ் நிலையம் வந்து மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்டான்லி வீதி, பலாலி வீதியூடாக ஆஸ்பத்திரி வீதி.

நண்பகல் 12-30 மணியளவில் பேரணி யாழ். செயலகத்தை அடைந்தது.

### கிளை ஊர்வலங்கள்

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் முகாமில் இருந்து நடத்திய ஊர்வலம் நேராக யாழ். செயலகத்தை வந்தடைந்தது. இதில் செங்குந்தா வித்தியாலயம், சாதனு பாடசாலை மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்கள், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் பருத்தித்துறை வீதியால்வந்து முத்திரைச் சந்தியை அடைந்தது. பின்னர் கச்சேரி - நல்லூர் வீதியால் சென்று யாழ் செயலகத்தை அடைந்தது.

விபத்து அல்லது மயங்கி விழுபவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்காக சென், ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைவீரர்கள் ஒரு வானில் பேரணியுடன் சென்றனர்.

### 9 பேர் மயக்கம்

பேரணியில் கலந்து கொண்ட ஒன்பது பேர் மயக்கமுற்று விழுந்தனர். இவர்களுக்கு உடனடியாக அம்புலன்ஸ் படையினர் முதலுதவி அளித்தனர்.

ஒலிபெருக்கி வாகனங்கள் கோஷங்களை முன்னுல் எழுப்பியபடி சென்றன. அவற்றைத் தொடர்ந்து தொழிற்சங்க உறுப்பினர்கள் கொடிகளைத் தாங்கிய வண்ணம் சென்றனர்.

பேரணியின் நடுவில் முகமூடிகளுடன் தோன்றிய வாலிபர்கள் சிலர் கூத்து நிகழ்ச்சிகளையும் நடத்திக் கொண்டு சென்றனர்.

## மலையகம். . .

(1–ம் பக்கத் தொடர்ச்சி)
மான 18 கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டது.

இதேவேளை நுவரெலியாவில் தமிழ் வர்த்தகர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.

### அகதிகள்

லிந்துல நகரில் ஜினதாஸ என்ற பொலீஸ் கான்ஸ்டபிளிடம் இருந்த துவக்கைத் தோட்டத் தொழிலாளர்கள் பறித்தெடுத்தனர். பின்னர் அவரைக் கல்லாலும்தாக்கினர் என்று தெரிகிறது.

தலவாக்கலையில்கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கோயில்ஒன்றில் சுமார் 300 தமிழ் அகதிகள்இருக்கின்றனர்.

விகாரை ஒன்றில் சுமார் 250 சிங்களவர்கள் அகதிகளாக இருக்கிறுர்கள்.

அவர்கள் இரு சாராருக்கும் உணவுப்பொருள்கள் விநியோகிக்க நுவரெலிய அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்தார்.

இதேவேளை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் உத்தரவின்பேரில் தலவாக்கலையில் இன்று (வியாழக்கிழமை) சமரச மாநாடு ஒன்றுநடக்க ஏற்பாடாகி உள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஹெலிக்கப்டர் மூலம் இன்று நுவரெலியா செல்வார். ஏனைய தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் மாநாட்டுக்கு அழைக்கப் பட்டுள்ளனர். தோட்ட நிர்வாகிகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: ந ஷப்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட். 807,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 8 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 30-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org